# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,640 — 1959 ජනවාරි 16 වැනි සිකුරාදා — 16.1.1959

11,640 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

### துணை விதிகள்

#### கொழும்பு மாநகரசபை

நாய் பதிவுச் சட்டத்தின் அத்தியாயம் 334, 4 ம் பிரிவை 1947 ம் ஆண்டின் 29 ம் இலக்க மாநகர சபைகள் சட்டத்தின் 277 ம் பிரிவோடு சேர்த்து வாசித்தற் கிணங்க, அதன் கீழ் உரிய அதிகார உத்தியோகத்தரால், அதாவது கொழும்பு மாநகரசபை விசேஷ கொமிஷனரால் கொழும்பு மாநகர சபைக்காக ஆக்கப்பட்ட உபவிதி.

வீ. எ. ஜயசிங்ஹ,
விசேஷ கொமிஷனர்,
கொழும்பு மாநகரசபை.

கொழும்பு,
1959 ம் ஜனவரி 9 ந் உ.

#### உப விதி

1905 ம் ஆண்டு ஒக்ற்ரோபர் மாதம் 20 ந் திகதி வெளியாய 6,080 ம் இலக்க கசெற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கொழும்பு மாநகரசபை உப விதிகள் 1906 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதி வெளியாய 6,116 ம் இலக்க கசெற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உப விதியால் திருத்தப்பட்ட படியுள்ள 5 ம் அத்தியாயத்தில் அதனகத்துள்ள 4 ம் உப விதியில் ஆறு என்னும் சொல் அவ்வுப விதியில் வரும் எவ்விடத்தும் அதற்குப் பதிலாக நாலு என்னும் சொல்லை இடுவதால் இத்தால் திருத்தப்படுகின்றன.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.